தினகரன்

# குறு, சிறு விவசாயிகளுக்கு எட்டாத மானியங்கள்

பதிவு செய்த நேரம்:2012-06-23 11:29:27

உத்தமபாளையம்: தமிழக அரசின் வேளாண் பொறியியல் துறை அளிக்கும் சலுகைகள், மானியங்கள் கிடைக்காமல் குறு, சிறு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தேனி மாவட்டத்தில் விவசாய பரப்பினை அதிகரிக்கவும், ஏற்கனவே உள்ள விவசாய நிலங்களில் உற் பத்தியை அதிகரித்திடவும், பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக வேளாண் துறை, வேளாண் பொறியியல் துறை மூலம் விவசாய கருவி கள், சொட்டுநீர் உள்ளிட்ட பல்வேறு சலு கைகள் வழங்கப்படுகின்றன.

வேளாண் பொறியியல் துறை அலுவலகம் உத்தமபாளையத்தில் உள்ளது. இங்கு டெக்னிக்கல் அதிகாரிகள் உள்ளனர். உத்தமபாளையம், போடி உள்ளிட்ட தாலுகாக்கள் இதில் அடங்குகின்றன. இத்துறை மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் சொட்டுநீர் பாசனம், வேளாண்மைத்துறை டிராக்டர்கள், மினி டிராக்டர்கள், களை அகற்றும் எந்திரம், நாற்று நடும் எந்திரம் உள்ளிட்டவை வழங்கப்படுகின்றன. இவை தவிர மலையடிவாரங்களில் விவசாய நிலங்களை மேம்படுத்திடும் வகையில், விவசாய ரோலர் எந்திரங்கள், டிராக்டர்கள் குறைந்த வாடகைக்கு விடப்படுகின்றன.

சலுகைகள், மானியங் களை பெற யாரை அணுக வேண்டும் என்று சிறு விவசாயிகளுக்கு தெரிய வில்லை. விவசாயத்தை மேம்படுத்த நினைக்கும் விவசாயிகள் பலர், மானியங்களை பெற வழி தெரியாததால், அப்படியே விட்டு விடுகின்றனர். ஆனால் பெரிய விவசாயிகளுக்கு மட்டும் மானியங் களை சரியாக சென்றடைந்து விடுகின்றன. குறு, சிறு விவசாயிகள் கூட்டி மானியங்கள் பெறுவதற்கான வழி கள், தகுதிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று, கோரிக்கை எழுந்துள்ளது.

விவசாயி மருதநாயகம் கூறுகையில், வேளாண் பொறியியல் துறை, விவசாய வளர்ச்சிக்கும், விளை பொருட்களை அதிகரிக்கும் நோக்கத்துடனும், சென்ற ஆண்டில் அறிவித்த திட்டங்களே இன்னும் செயல் படுத்தப்பட வில்லை. விவசாயிகளை மானியங்கள் சென்றடைய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

## 28ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பதிவு செய்த நேரம்:2012-06-23 11:56:45

காஞ்சிபுரம்: கலெக்டர் ஹனீஸ் சாப்ரா வெளியிட்டுள்ள அறிக்கை:
மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 28ம்தேதி காலை 11 மணிக்கு நடக்கிறது. கலெக்டர் தலை மை வகிக்கிறார். இதில் விவசாயிகள் தவறாது கலந்து கொண்டு வேளாண்மைத்துறை தொடர்பான கோரிக்கை மனுக்களை அளிக்கலாம்.

## பயிர்களை அழிக்கும் மான்கள்

பதிவு செய்த நேரம்:2012-06-23 10:42:10

திருப்பூர்: கோதபாளையம் பகுதியில் மா ன்களால் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈடு தர வேண்டும் என நேற்று நடந்த விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டத்தில் ஆர்.டி.ஓ.,விடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.
திருப்பூர் ஆர்.டி.ஓ., அலுவலகத்தில், கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்ப்புக் கூட்டம் ஆர்.டி.ஓ., அலுவலகத்தில் நேற்று நடந்தது. ஆர் .டி.ஓ.,செங்கோட்டையன் தலைமை வகித்தார். ஆர் .டி.ஓ., தலைமை உதவியாளர் வெங்கடல ட்சுமி, சமூக பாதுகாப்புத்திட்டம் தனித தாசில்தார் மோகன், அவிநாசி சமூக பாதுகாப்புத்திட்ட தனிதாசில்தார் தேவமனோகரன், பல்லடம் தாசில்தார் குலோத்துங்கன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், வனத்துறை, மின்சாரத்துறை, பொதுப்பணி த்துறை, கால்ந ட த் துறை, வேளாண்மை த்து றை, காவல்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளை சேர்ந்த அதிகாரிகள் மற்றும் திருப்பூர், அவிநாசி, பல்லடம் ஆகிய பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் கலந்துகொண்டனர்.
கூட்டம் துவங்கியதும், கடந்த கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, அதிகாரிகள் தெரிவித்தனர்.
இதையடுத்து, விவசாயிகள் பேசியதாவது:
ஆண்டிபாளையம் குளத்தில் சாக்கடை கழிவு நீர் கலப்பதாக கடந்த கூட்டத்தில், புகார் மனு அளித்தும், இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்த ல், சுகாதாரமான குளம் என சான்றிதழ் கொடுக்கப்பட்ட குளம்.
ஆனால், தற்போது கழிவு நீரால் மாசுப்பட்டு நிற்கிறது. அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்காமல், விவசாயிகளையும், பொதுமக்களையும் போராட துண்டுகிறார்கள்.
மேலும், ஆண்டிபாளையம், சாமளாபுரம் ஆகிய குளங்களில் மீன் பிடிக்கும் உரிமை, மீனவர் சங்கங்களுக்கு ஏலம் விட் டதாக தெரிவிக்கின்றனர். ஆனால். ஒரே நபர் பல பெயர்களில் ஏலம்

எடுத்து, அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தி வருகிறார். ஆகவே மீன் பிடிக்கும் உரிமையை பொது ஏலம் விட வேண்டும்.
பெங்கலுர், பல்லடம் ஆகிய பகுதிகளில் மயி ல்களால் விவசாய நிலங்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டு வருகிறது. ஆகவே உரிய நடவடிக்கை எடுத்து மயில்களை வனப்பகுதிக்கு கொண்டு விட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.
அப்போது, திருப்பூர் தெற்கு தொகுதி எம்.எல்.ஏ., தங்கவேலு தலைமையில் வந்த 25க்கும் மேற்பட்ட விவசாயிகள், கோதபாளையம் உள்ளிட்ட 10 கிராமங்களில், மான்களால் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈடு தர வேண்டும் என கோ ரிக்கை விடுத்தனர்.
தொ டர்ந்து அவர்கள் ஆர்.டி.ஓ.,விடம் கூறு கையில், அவிநாசி அருகே உள்ள கோதம்பாளையம் பகுதியில் கடந்த 15 ஆண்டுகளாக 200க்கும் மேற் பட்ட மான்கள் உள்ளன. இதனால் அப்பகுதியில் விவசாய நிலங்கள் கடுமயாக பாதிக்கப்பட்டு உள் ளது.
தற்போது மான்களுக்கு பயந்து விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
இதுகுறித்து மாவட்ட கலெக்டரிடமும் புகார் தெரிவித்தோம். இதுவரை உரிய நடவடிக்கை இல்லை. மான்கள் கும்பலாக வந்து பயிர்களை மேய்ந்து சென்று விடுகிறது.
இதனல் விவசாயிகள் கடும் நஷ்டத்துக்குள்ளாகின்றனர். ஆகவே, மான்களை அப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பதோடு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணமும் வழங்க வேண்டும்' என் றனர்.
இதற்கு பதிலளித்து பேசிய ஆர்.டி.ஓ., 'பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அடுத்த கூட்டத்திற்குள் நிவாரணத்தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வனத்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும் இப்பிரச்னை குறித்து வருகிற 25ம் தேதி கலெக்டர் அலுவலகத்தில், கலெக்டர் தலைமையில், மாவட்ட வனத்துறை அதிகாரி மற்றும் விவசாயிகள் பங்கேற்கும் கூட்டம் நடத்தப்படும்' என்றார்.

## உழவர்சந்தையில் தேங்கி கிடக்கும் குப்பை, தேங்காய் ஓடுகள்

பதிவு செய்த நேரம்:2012-06-22 11:44:43

விழுப்புரம்: விழுப்புரம் உழவர் சந்தையில் தேங்கி கிடக்கும் குப்பை, தேங்காய் ஓடுகளால் கொசுக்கள் அதிகளவு உற்பத்தியாகி அங்கு வரும் பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கடந்த திமுக ஆட்சியில் உழவர் சந்தை அமைக்கப்பட்டது. இதன் மூலம் விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகள் வியாபாரிகள் இன்றி அவர்களே நேரடியாக விற்பனை செய்து அதிக லாபம் அடைந்தனர்.

உழவர் சந்தையில் அனைத்து காய் கறிகளும் விலை குறைவாகவும், தரமாகவும் விற்பனை செய்வதால் நுகர்வோர்கள் அதிகளவில் உழவர் சந்தைக்கு சென்று காய்கறி வாங்குகின்றனர். இந்த திட்டத்துக்கு மக்களிடையே பெரும் வரவேற்பு இருந்தது. வேளாண்மைத்துறை மூலம் கண்காணிக்கப்பட்டு வரும் இந்த உழவர் சந்தைகளை நாளுக்கு நாள் பராமரிக்க தவறி விட்டனர். விழுப்புரத்தில் அமைக்கப்பட்டுள்ள உழவர் சந்தையில் பராமரிப்பு சிறிதளவும் இல்லை. உழவர் சந்தை முழுவதும் தேங்கி கிடக்கும் குப்பைகள் பல மாதங்களாக இன்னும் அள்ளப்படவில்லை. இதேபோல் இளநீர் ஓடுகளும் மலைபோல் குவிந்து கிடக்கிறது. தேங்கி கிடக்கும் குப்பைகளில் கொசுக்கள் உற்பத்தியாகி டெங்கு, சிக்கன்குனியா போன்ற நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தினம் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இங்கு வந்து செல்கின்றனர். உழவர் சந்தையில் நிலவும் சுகாதார சீர்கேட்டால் இங்கு வரும் பொதுமக்களுக்கு நோய் பரவும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. இதேபோல் அதிகாலையில் வரும் விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கு உழவர் சந்தையிலேயே கழிப்பிட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

பராமரிப்பு இல்லாததால் அதனை யாரும் பயன்படுத்துவது இல்லை. இதனால் விவசாயிகள் உழவர் சந்தையில் உள்ள பின்புறத்தில் சிறுநீர், மலம் கழிக்கின்றனர். திறந்தவெளியில் கழிவறையை பயன்படுத்துவதால் அங்கு துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அங்கு வரும் பொதுமக்கள் முகம் சுளித்துக் கொண்டே செல்கின்றனர். இதனால் நாளுக்குநாள் நுகர்வோர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே செல்கிறது. விவசாயிகளும் தங்களது பொருட்கள் விற்பனை ஆகாததால் கவலையடைந்துள்ளனர்.

இதேநிலை நீடித்தால் விழுப்புரம் உழவர் சந்தை மூடும் நிலை ஏற்படும். எனவே விழுப்புரம் ஆட்சியர் சம்பத் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்களும், விவசாயிகளும் கோரிக்கை வைத்துள்ளனர்.

## விவரங்களை அறிந்தபின் விதைகளை வாங்குங்கள் விவசாயிகளுக்கு அதிகாரி அறிவுரை

பதிவு செய்த நேரம்:2012-06-22 10:29:10

நாகை: விவசாயிகள் விதை வாங்கும் முன் கவனிக்க வேண்டிய விவரங்கள் குறித்து நாகை விதை ஆய்வு துணை இயக்குனர் ரவீந்திரன் யோசனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

விதை விற்பனை நிலையங்களில் விதை விற்பனை உரிமம் பார்வையில் தெரியும்படி மாட்டி வைக்கப்பட்டுள்ளதா என்றும், இருப்பில் உள்ள விதைகளின் ரகங்கள், அதன் விலைப்பட்டியல், விதை இருப்பு போன்ற தகவல்களை பூர்த்தி செய்து தகவல் பலகை நன்கு தெரியும்படி வைக்கப்பட்டுள்ள தா என்பதை கவனிக்க வே ண்டும்.

விதை மூட்டைகளிலோ அல்லது விதை பைகளிலோ விவர அட்டைகள் அதாவது உற்பத்தியாளர்

விவர அட்டை மற்றும் சான்ற ட்டை ஆகிய 2 அட்டைகள் உள்ளதா என்பதையும், காலாவதி நாள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றும், மூட்டைகளில் சீல் வைக்கப்பட்டுள்ளதா என்பதையும் கவனிக்க வேண்டும்.

அறிவிக்கப்படாத தனியார் வீரிய ஒட்டு ரக ங்கள் மற்றும் பிற ரக விதை கள் வாங்கும் முன் இதர மாநிலத்திலிருந்து வரும் சான்று விதைகளுக்கும், அந்த விதைகளின் பகுப்பாய்வு மற்றும் அனைத்து விவரங்கள் உள்ள படிவம் 11 உள்ளதா என்பதை பார்த்து வாங்க வேண்டும். கட்டாயம் பட்டியல் கேட்டு பெற வேண்டும்.

பட்டியலில் விதை விற்ப னை உரிமம் எண், விதையின் பெயர், ரகம், நிலை, குவியல் எண், விவசாயிகளின் கையொப்பம், விற்பனையாளரின் கையொப்பம் இடம் பெற்றிருக்க வேண்டும். விதையின் தரத்தினால் பாதிக்கப்படும் விவசாயிகள் நஷ்டஈடு கோருதலும், விதை பற்றிய விழிப்புணர்வும் அதிகமாகி உள்ள இந்த சூழ்நிலையில் விதைகளை வாங்குவதற்கு முன் அதனைப்பற்றிய விவரம் முழுவதும் தெரிந்து வாங்குவதே நல்லது. இவ்வாறு ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம் 29ம் தேதி நடக்கிறது

பதிவு செய்த நேரம்:2012-06-23 10:20:29

நாமக்கல்: நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம் வரும் 29ம் தேதி நடக்கிறது.

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 29 ம் தேதி காலை 11 மணிக்கு நடைபெறுகிறது. ஆட்சியர் குமரகுருபரன் தலைமை வகிக்கிறார். இதில் விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவிக்கலாம்.

## முட்டை விலை 2 காசு உயர்வு

பதிவு செய்த நேரம்:2012-06-23 10:20:13

நாமக்கல்: நாமக்கல்லில் முட்டை விலை 2 காசு உயர்ந்துள்ளது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடைபெற்றது. இதில், முட்டை உற்பத்தி மற்றும் விற்பனை நிலவரம் பற்றி பண்ணையாளர்கள் ஆலோசித்தனர். இதை தொடர்ந்து 322 காசுகளாக இருந்த முட்டை விலையில் மேலும் 2 காசுகள் உயர்த்தி ஒரு முட்டையின் பண்ணைக்கொள்முதல் விலை 324 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.54 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ. 76 ஆகவும் விலை நிர்ணயம்

செய்யப்பட்டது.

பிற மண்டலங்களில் நிர்ணயம் செய்யப்பட்ட முட்டை விலை விபரம் (பைசாவில்) வருமாறு: சென்னை- 331 , பெங்களூரு-322, மைசூர்-322, ஹைதராபாத்-301, மும்பை-333, விஜயவாடா-303, கொல்கத்தா-345 காசுகள், பார்வாலா-290, டில்லி-300 காசுகள்.

## மானிய விலையில் நாற்றுக்கள் தோட்டக்கலைத்துறை அழைப்பு

பதிவு செய்த நேரம்:2012-06-23 10:15:05

ஊட்டி: நீலகிரி விவசாயிகளுக்கு ரூ.26 லட்சம் மதிப்பிலான நாற்றுக்களை மானிய விலையில் வழங்க தோட்டக்கலைத்துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் மோகன் கூறியதாவது:

நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, கூடலூர் வட்டாரங்களில் தற்போது பெய்து வரும் தென்மேற்கு பருவ மழையை உழவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்காக தோட்டக்கலைத்துறையின் கீழ் விவசாயிகளுக்கு நடப்பு ஆண்டு 2012-13ல் ஒருங்கிணைந்த தோட்டக் கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 1310 ஹெக்டர் பரப்பளவிற்கு 50 சதவீத மானிய விலையில் பல்வேறு நாற்றுக்கள் வழங்கப்படவுள்ளன.

குறிப்பாக காபி, தேயிலை நாற்றுக்கள், சில்வர் ஓக் நாற்றுக்கள், வாசனை திரவியங்களான மிளகு, கிராம்பு, ஜாதிக்காய், லவங்கப்பட்டை நாற்றுகள் வழங்கப்படும். அதே போல், பழச் செடிகளான எலுமிச்சை, பலா ஒட்டுச் செடிகள், பிளம், பேரி, பீச்சஸ் போன்ற நாற்றுகள் வினியோகம் செய்யப்படும், இதன் மதிப்பு ரூ.26 லட்சமாகும்.

இந்த நாற்றுக்கள் அனைத்தும் அரசு தோட்டக்கலை பண்ணைகளான கல்லார், பர்லியார், காட்டேரி, பழவியல் நிலையம், குன்னூர், தொட்டபொட்டா, தும்மனட்டி, நஞ்சநாடு, கோல்கிரைன், மற்றும் தேவாலாவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமையில் மானியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, நாற்றுக்கள் தேவைப்படும் விவசாயிகள் அந்தந்த பகுதியில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்கனரை அணுகி விவரம் பெற்று நாற்றுக்கள் வாங்கி பயன் அடைய வேண்டும்.

## டிஏபி உரம் விலை கடும் உயர்வு

பதிவு செய்த நேரம்:2012-06-23 11:21:15

மதுரை: மதுரை மாவட்டத்தில், 118 வேளாண் வங்கிகளில், 342 டன் டிஏபி உரம் மற்றும் டான்செட் நிறுவனத்தில் 1118 டன் டி.ஏ.பி. உரம் இருப்பு உள்ளது. இதில் 50 கிலோ கொண்ட ஒரு மூடை ரூ.905க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது.

தற்போது டிஏ.பி.யின் விலை ரூ.1,200 ஆக உயர்ந்துள்ளது. இதனால், விவசாயிகளுக்கு டி.ஏ.பி. உரங்களின் இருப்பு இருக்கும் வரை பழைய விலையிலேயே விற்பனை செய்யப்படும். தேவையான விவசாயிகள் சிட்டா அடங்கலைக் காண் பித்து பழைய விலையிலேயே உரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என கலெக்டர் அறிவித்துள்ளார்.